ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.

எட்டாம் வகுப்பு : தமிழ்

தமிழ் மொழி வாழ்த்து

குறுவினா விடை

1.தமிழ் மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக

காலத்திலும் நிலைபெற்றிருக்கிறது. எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்யும். தமிழ் உலகம் உள்ள வரையிலும் வாழ்க தமிழ் மேன்மை உற்று,உலகம் முழுவதும் சிறப்படைய தமிழ்மொழி வாழ்க!

2. தமிழ் மொழி மரபு குறுவினா உலகம் எவற்றால் ஆனது?

உலகம் நிலம் ,தீ ,நீர், காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையால் ஆனது.

3.செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?

செய்யுளில் மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

தமிழ் வரிவடிவ வளர்ச்சி

குறுவினா

1.ஓவிய எழுத்து என்றால் என்ன?

தொடக்ககாலத்தில் எழுத்து ஓவிய வடிவமாகவே இருந்தது இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

2.ஒலி எழுத்து நிலை என்றால் என்ன? ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. ஓலைச்சுவடிகளில் நேர் கோடுகள் புள்ளிகள் ஆகியவற்றை பயன்படுத்த இயலாமைக்கு காரணம் என்ன?

இடம் பெறும் எழுத்துக்களை எழுதும் போது அவை சிதைந்து விடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்

2.வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்து சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக

அகர வரிசை எழுத்துகளில் புள்ளி இருந்தது. “எ“ என்னும் எழுத்துக்கு கீழ் கோடிட்டு “ஏ“ என்னும் எழுத்தை நெடிலாக,” ஒ” என்னும் எழுத்திற்கு சுழி இட்டு ”ஓ”என்னும் எழுத்தாக உருவாக்கினர்.

சிறு வினா

1.எழுத்து சீர்திருத்தம் தேவை குறித்து எழுதுக.

ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளி பெரும் எழுத்துக்களில் எழுதும்போது சிதைந்து விடும் என்பதால் விடாமல் எழுதினர். ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகள் பிரித்தலும் கிடையாது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் தடுமாறினர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியது ஆயிற்று.

2.தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

1. துணை கால் 2.இணை கொம்பு 3.கொம்பு கால்

ச.கேசவ மதகாசாஞ

## எழுத்துக்களின் பிறப்பு

### சிறுவினா

1.எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?

உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களில் ஒன்றில் பொருந்தி ஒலி உறுப்புகளின் முயற்சியினால் வேறு வேறு ஒலிகளாக பிறக்கின்றன. இதனை எழுத்துக்களின் பிறப்பு என்று கூறுவர்.

2.மெய்யெழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

வல்லினம் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.

மெல்லினம் ஆறுமுக இடமாகக் கொண்டு பிறக்கும்.

இடையினமும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

## ஓடை - குறுவினா

1.ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

உருண்டு, தவழ்ந்து, நெளிந்து, கரையை மோதி இடையறாது ஓடை ஓடுகிறது.

2.ஓடை எழுப்பும் ஒலி எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்

ஓடை எழுப்பும் ஒலிக்கு முழவை முழக்குதல் உவமையாக வாணிதாசன் கூறுகிறார்.

### சிறுவினா

1.ஓடையின் பயன்கள் ஆக வாணிதாசன் கூறுவன யாவை?

ஓடை நிலங்களுக்கு நீர் வளம் தந்து பயிர்களைச் செரிக்கச் செய்கிறது. உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. அலைகள் கரையை மோதுகிறது. இன்பம் சேர்க்கிறது. இரக்கமில்லாத வருமாறு ஓடி தன் உழைப்பைத் தருகிறது.

## கோணக்காத்துப்பாட்டு

### குறுவினா

1.கப்பல் கவிழ்ந்தன் காரணமாக கோணக்காத்துப்பாட்டு கூறுவது யாது?

கப்பல் பெரும் மழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

2.புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னா பின்னமாக ஒடிந்து விழுந்தன.

3.கொல்லிமலை பற்றி பாடல் கூறும் செய்தி யாது?

சித்தர்கள் வாழும் கொல்லிமலை சுற்றி உள்ள பகுதிகளிலும் புயலடித்து துன்புறுத்தியது.

### சிறுவினா

1.புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாக பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

வாங்கலில் தென்னம் பிள்ளைகள் வீணாகின.தொண்டைநாட்டு சிறப்பு

சு.சேகர் பட்டதாரி ஆசிரியர்

மரங்கள் அனைத்தும் சின்னா பின்னமாக ஒடிந்து விழுந்தன.

2.கோண காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

காற்று வேகமாக அடித்தால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் பிரிந்து சரிந்தன. அழகிய சுவர்களை உடைய மாடிவீடுகள் அடியோடு விழுந்தன

நிலம் பொது - குறுவினா

1.விலை கொடுத்து வாங்க இயலாதவை என சியாட்டல் கூறுவன யாவை?

வானத்தையும் காற்றின் தூய்மையும் நீரின் உயர்வையும் விலை கொடுத்து வாங்க முடியாது.

2. நிலத்திற்கும் செவ்விந்தியர்கள் உள்ள உறவு யாது?

பூமியைச் செவ்விந்தியர்கள் மறப்பதே இல்லை. பூமி அவர்களுக்குத் தாய்.அந்த மண்ணும் அவர்களுக்கே உரியது ஆகும்.

3. எதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என சியாட்டல் கூறுகிறார்?

எருமைகள் கொல்லப்படுவது, மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு ,மலைகளை மறைத்து தொலைபேசி கம்பிகள் பெருக்குதல் ஆகியவற்றைச் சியாட்டல் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறுகிறார்.

4. நீர்நிலைகள் குறித்து சட்டம் கூறியுள்ளவற்றை எழுதுக.

நீரின் முணுமுணுப்பு என் பாட்டன் மார்களின் குரல். ஆறுகள் என் உடன் பிறந்தவர்கள். ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் நீரானது வெறும் தண்ணீர் என்று எமது மூதாதையரின் இரத்தம் ஆகும்.

4. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார் ?

மலர்கள் எமது சகோதரிகள், மான்கள் குதிரைகள் கழுகுகள் எனது சகோதரர்கள் ,மலை முகடுகள், பசும் புல்வெளிகள் குதிரைகளின் உடல் சூடு ஆகிய எல்லாம் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.

வினைமுற்று - குறுவினா

1.வினைமுற்று என்றால் என்ன?

பொருள் முற்றுப்பெற்ற வினைச் சொற்களை வினைமுற்று என்று கூறுவர்.

2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

செய்பவன் ,கருவி ,நிலம் ,செயல் ,காலம் ,செய்பொருள் ஆகியவற்றை காட்டும்.

3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

க ,இய, இயர், அல் .

திருக்குறள் - குறுவினா

1. சான்றோர்க்கு அழகாவது யாது

சான்றோருக்கு அழகு துலாக்கோல் போல சரியாகச் செயல்படுவது ஆகும்.

2. பழியின்றி வாழும் வழியாக திருக்குறள் கூறுவது யாது?

முதலில் தன் குற்றத்தை நீக்கி பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்த வலியும் ஏற்படாது.

3."புலித்தோல் போர்த்திய பசு" என்னும் உமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

மனதை அடக்கும் வலிமை இல்லாதவர்கள் புலித்தோல் போர்த்திக் கொண்டு பசு பயிரை மேய்வது போலத்தான்.

நோயும் மருந்தும் - குறுவினா

1. நோயின் மூன்று வகைகள் யாவை?

மருந்தினால் நீங்கும் நோய், எதிலும் தீராத நோய் ,வெளியே ஆறினாலும் உள்ளே இருக்கும் நோய்.

2. நீலகேசியில் நோய் தீர்க்கும் மருந்துகளாக கூறப்படுவன யாவை?

நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம்.

சிறு வினா

1.நோயின் வகைகளாகவும் அவற்றைத் தீர்க்கும் வழிகளாவும் நீலகேசி கூறுவன யாவை?

நோயின் வகைகள்

மருந்தினால் நீக்கும் நோய், தீராத தன்மையுடைய நோய் ,வெளியில் ஆறினாலும் உள்ளிருக்கும் நோய்.

நோய் தீர்க்கும் மருந்து

நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம்

வருமுன் காப்போம் - குறுவினா

1.நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு நல்ல காற்றைச் சுவாசித்தால் நம்மை நோய் அணுகாது.

1.அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமையாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?

செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டு பாயில் விழுவீர்கள் என்று கவிமணி குறிப்பிடுகிறார்.

தமிழர் மருத்துவம் -குறுவினா

1.மருத்துவம் எப்போது தொடங்கியது?

தொடக்க காலத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கை காய்கறிகளைக் கொண்டு நோயைத் தீர்த்தான். அப்போதே மருத்துவம் தொடங்கியது.

2.நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?

நடைபயணம், யோகா ,தியானம், மூச்சுப்பயிற்சி.

3.தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாக பயன்படுபவை எவை?

வேர் ,இலை, தழை உலோகம், பாஷாணங்கள் ,மூலிகைகள்.

சிறுவினா

1.நோய் பெருகக் காரணம் என்ன?

மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் நோய்க்கு முதல்

காரணம்.மாறிப்போன உணவு மாசு நிறைந்த சுற்றுச்சூழல் மன அழுத்தம் இயற்கையோடு ஒன்றி வாழ்வது தான் பல நோய்கள் பெருகி என்று காரணம் எனலாம்.

2. பள்ளி குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

வருமுன் காக்க வேண்டும்.சரியான உணவு ,சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழ வைக்கும். காய்கறிகள், கீரைகள், பழங்கள் ,சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்கணினி மற்றும் கைபேசி முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

எச்சம் -குறு வினா விடை

1.எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

பொருள் முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் ஆகும். இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இருவகை ஆகும்.

2. "அழகிய மரம்" எச்ச வகையை விளக்குக.

"அழகிய மரம்" இத்தொடரில் உள்ள "அழகு "எனும் சொல்லில் செயலையும் காலத்தையும் அறியமுடியவில்லை பண்பினை மட்டும் குறிப்பாக அறியமுடிகிறது. எனவே இது குறிப்பு பெயரெச்சம் ஆகும்.

3.முற்றெச்சத்தைச்சான்றுடன் விளக்குக

ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

சான்று - படித்தனர் மகிழ்ந்தனர்

பொதுக்கட்டுரை

நான் விரும்பும் கவிஞர் பாரதியார்

முன்னுரை

பாட்டுத் திறமையால் நாட்டின் அறிவைப் போக்க போராடியவர் பாரதியார் அவரே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

பிறப்பும் இளமையும்

பாரதியார் சின்னசாமி -இலக்குமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். தன்னுடைய பதினேழாவது வயதில் பாரதி என்னும் பட்டம் பெற்றார். மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

பாரதியின் படைப்புகள்

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ,பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி,தேசிய பாடல்கள் ,மொழி பாடல்கள் ஆகியன இவரது படைப்புகளில் சிலவாகும்.

விரும்ப காரணம்

எளிமை ,இனிமை ,புதுமை ,தெளிவு விழிப்புணர்வு, நாட்டுப்பற்று ஆகியன பாரதியாரின் கவிதைகளில்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

காணப்படுவதால், அவரை நான் பெரிதும் விரும்புகின்றேன்.

பிடித்த பாடல்

”ஓடி விளையாடு பாப்பா”

” வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்”

-ஆகிய பாடல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

முடிவுரை

பாரதி தமிழ்நாட்டு கவியாய் பிறந்து, தேசிய கவியாய் வளர்ந்து, உலக கவியாய் உயர்ந்த உத்தமர் போற்றுவோம்.

வாழ்க வளர்க! பாரதி புகழ்!

விரிவானம்

வெட்டுக்கிளியும் சருகுமானும்

முன்னுரை

காடர்களின் கதைகளைக் கீதா என்பவர் தமிழாக்கம் செய்துள்ளார். அதில் வரும் கதை ஒன்றுதான் ”வெட்டுக்கிளியும் சருகுமானும்” கதை.

குறிஞ்சி புதர்

நடுகாட்டில் ஓடை பள்ளத்தாக்கின் அருகில் குறிஞ்சி புதர் ஒன்று இருந்தது. விலங்குகள் அங்கு தான் ஓய்வு எடுக்கும். அதனை ஒட்டிய கிளை ஒன்றில் பச்சைக்கிளி வாழ்ந்து வந்தது. அது வாயாடி பேசிப்பேசி மாட்டிக்கொள்ளும்.

கூரனின் ஓட்டம்

மாலை நேரத்தில் வெட்டுகிளி சருகுமானும் பார்த்தது மேலும் ஏன் அங்குமிங்கும் ஓடுகின்றாய் எனக் கேட்டது. பித்தக் கண்ணு என்னும் சிறுத்தை என்னைத் துரத்திக் கொண்டு வருகின்றது, அதனால் ஓடுகின்றேன் என்றது சருகுமான்.

கூரன் மறைந்து கொள்ளுதல்

பித்தக்கண்ணிடம் வளவளவென்று பேசாதே! நான் புதருக்குள் ஒளிந்து கொள்கிறேன் என்றது சருகுமான். சருகுமான் ஒளிந்துகொள்ள, அங்குப் பித்தக்கண்ணு வந்தது.

வெட்டுக்கிளியின் ஆட்டம்

வெட்டுக்கிளி இடம் பித்தக்ண்ணு கேட்க வாயாடி வெட்டிகிளி சும்மா இருக்காமல் புதர் மீது குதித்தது. புரிந்துகொண்டு தேடியது புனுகுப் பூனை நேற்று புதரில் தங்கி இருந்ததால் அந்த நாற்றத்தில் கண்டுபிடிக்க முடியாமல் சென்றது. கூரன் எப்படியோ பிழைத்தது.

முடிவுரை

இனி இப்படிச் செய்தால் காலால் நசுக்கி விடுவேன் என்று வெட்டுக்கிளியயைக் கூரன் கண்டித்தது.

நீதி -உண்மையான நண்பனை ஆபத்தில் அறிக!

ஆக்கம் - ச.சேட்டு மதார்சா,
எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,டிப்.போக்,பி.ஜி.டிப்.அனிமேசன்,பி.ஜி.டிடி.ஆர்,யு.ஜி.சி.நெட்,பிஹெச்.டி.ப.ஆசிரியர்(தமிழ் )
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி, ஈரோடு -63801.
அலைபேசி-8883681115